

பாடம் 6

பெப்ரவரி 1-7

# ஆணவத்திலிருந்து அழிவுக்கு

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *தானி 5; வெளி 17:4-6; சங் 96:5; கொலோ 1:15-17; ரோமர் 1:16-32; பிரசங்கி 8:11; வெளி 14:8.*

**மனன வசனம்:** அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்; ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்; ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர். தானியேல் 2:21.

மனிதன் அளவுக்குமீறி ஆணவம்கொண்டால், எதிர்பாராத மோசமான முடிவைச் சந்திக்கவேண்டியிருக்கும் என்று தானி 5இன் தேவவார்த்தைகள் சொல்கின்றன. இதைக் கற்றுக்கொள்ள நேபுகாத்நேச்சாருக்கு வெகுகாலமானது; ஆனால் கற்றுக்கொண்டான். அவனுடைய பேரனாகிய பெல்ஷாத்சார் கற்றுக்கொள்ளவில்லை. அரண்மனை களியாட்டத்தில் தேவாலயப் பாத்திரங்களைப் பயன்படுத்தி, அவற்றைத் தீட்டுப்படுத்தினான். தீட்டான அந்தச் செயல் தேவனுக்கே சவால்விடுவதாக, தேவனை நேரடியாகத் தாக்குவதாக இருந்தது. இவ்வாறு தேவனுடைய ஆசரிப்புக்கூடாரத்தின் அடித்தளத்தைத் தாக்கின சின்னக்கொம்பைப் போல (தானி 8), பெல்ஷாத்சார் தன் அக்கிரமத்தின் பாத்திரத்தை நிரப்பினான். பெல்ஷாத்சாரிடமிருந்து தேவன் ஆளுகையை விலக்கினார்; அதுபோல கடைசிக் காலங்களில் தம் பிள்ளைகளின் எதிரிகளை அவர் சரிகட்டுவார். தானி 5இல் சொல்லப்படும் சம்பவம் கி.மு. 539இல் நிகழ்ந்தது; அன்று இராத்திரியில் மேதிய-பெர்சிய இராணுவத்திடம் பாபிலோன் விழுந்தது. தானி 2 முன்னுரைத்தது போல, பொன் போய் வெள்ளி வந்ததை இங்கு காண்கிறோம். உலக விவகாரங்கள் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருப்பதை மீண்டும் இந்தச் சம்பவம் தெளிவுப்படுத்துகிறது.

*2020, பெப்ரவரி 8 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு பெப்ரவரி 2

# பெல்ஷாத்சாரின் விருந்து

**கேள்வி:** **தானி 1:1,2ஐயும், தானி 5:1-4ஐயும் வாசியுங்கள். பெல்ஷாத்சாரின் செய்த மோசமான காரியம் என்ன? அவனுடைய உண்மையான குணம் அதில் எவ்வாறு வெளிப்படுகிறது? அவனுடைய செயல்களை வெளி 17:4-6 வசனங்களுடன் ஒப் பிடுங்கள். என்ன ஒற்றுமைகள் உள்ளன?**

---

எருசலேம் தேவாலய பாத்திரங்களை திராட்சரசத்தைப் பரிமாறு கிற பாத்திரங்களாகப் பயன்படுத்தும்படி ராஜா சொன்னான். அந்தப் பாத்திரங்களை எருசலேம் தேவாலயத்திலிருந்து எடுத்து வந்து, தன்னு டைய தேவர்களுடைய கோவிலில் வைத்திருந்தான்; அந்தப் பாத்திரங் கள் பரிசுத்தமானவை என்கிற எண்ணம் அவனுக்கு இருந்தது. ஆனால் பெல்ஷாத்சார் அந்தப் பரிசுத்தமான பாத்திரங்களை குடிப்பதற்கான பாத்திரங்களாக்கி, தீட்டுப்படுத்தினான்.

அந்தப் பரிசுத்த பாத்திரங்களில் பருகியபோது, பெல்ஷாத்சாரின் பிரபுக்கள் ‘பொன்னும் வெள்ளியும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தார்கள்.’ தானி 5:4. ஆறு வகை பொருட்கள் குறிப்பிடப்படுகின்றன. அறுபதின் கூறு அமைப்பை பாபி லோனியர்கள் பயன்படுத்தினார்கள். இன்று எண் 10 இன் அடிப்படை யில், தசம அமைப்பு பயன்படுத்தப்படுவதுபோல அன்று எண் 60இன் அடிப்படையில் அறுபது கூறு அமைப்பு பயன்படுத்தப்பட்டது. எனவே, அறுவகை தெய்வங்கள் ஒட்டுமொத்த பாபிலோனிய தேவர் களையும் சுட்டிக்காட்டின. பாபிலோனிய மார்க்க அமைப்பு முழுவதை யும் உள்ளடக்கிய அடையாளமாக இருந்தன. நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பனத்தின் பொருட்களின் வரிசைமுறை இங்கும் காணப்படுகிறது; ஆனால், களிமண்ணுக்குப் பதிலாக மரம் இங்குச் சொல்லப்படுகிறது. சொப்பனத்தைப்போல இங்கும் கல் கடைசியில் வருகிறது; சிலை செய்யப்பட்டிருக்கிற ஒரு பொருளாக கல் குறிப்பிடப்படுகிறது. ஆனால், உலக ராஜ்யங்கள்மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரு வதைச் சுட்டிக்காட்டுவதாகவும் கல் இருக்கிறது. தானி 2:44,45.

இந்த விருந்தை வெளிப்படுத்தலில் சொல்லப்படும் கடைசிக்கால பாபிலோனுடன் ஒப்பிடலாம். பெல்ஷாத்சாரைப் போல கடைசிக்கால பாபிலோனின் ஸ்திரீயானவள், தன் கையில் ஒரு பொற்பாத்திரத்தைப் பிடித்து, தீட்டான பானத்தை தேசங்களுக்குக் கொடுத்தாள். அதாவது, பொய்ப்போதனைகளாலும் திரிக்கப்பட்ட ஆராதனை முறைகளாலும் நவீன பாபிலோனானது உலகத்தை தீமைக்குள் மயக்கி இழுக்கிறது. வெளி 17:4-6. சீக்கிரம் அவள்மேல் நியாயத்தீர்ப்பு சம்பவிக்கும்.

---

நம்முடைய சமுதாயமும் கலாச்சாரமும் தேவ வார்த்தையின் சத்தியத்தை எவ்வாறு தீட்டுப் படுத்திவருகின்றன? நயவஞ்சகமான வழிகளில்கூட அந்த தெய்வ நிந்தனையான செயலில் நாம் பங்குகொள்ளாதிருக்க என்ன செய்யலாம்? உங்கள் பதிலை ஓய்வுநாள் வகுப்பில் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# அழையா விருந்தாளி

**கேள்வி: தானியேல் 5:5-8இல் என்ன நடக்கிறது? ராஜா ஏன் அந்த நிலைக்கு ஆளானான்? இந்தச் சம்பவத்திற்கும் தானி 2இன் சம்பவத்திற்கும் உள்ள ஒற்றுமை என்ன? அந்த ஒற்றுமை வலியுறுத்தும் உண்மை என்ன? சங் 96:5; கொலோ 1:15-17.**

முந்தின நெருக்கடியின்போது நேபுகாத்நேச்சார் செய்ததுபோல (தானி 2:2; 4:7), பெல்ஷாத்சாரும் இங்கு அந்த மர்மமான எழுத்துகளுக்கு அர்த்தம் சொல்லும்படி ஜோசியரையும் கல்தேயரையும் குறிசொல்லுகிறவர்களையும் அழைத்தான். அவர்களுக்குக் கிடைக்க விருந்த அரச மரியாதையையும் அவன் சொல்லத் தவறவில்லை:

1 **இரத்தாம்பர உடுப்பு.** அரசர்கள் உடுத்துகிற நிறம். எஸ்தர் 8:15;

2 **பொற்சரப்பணி.** உயர்ந்த சமுதாய அந்தஸ்தின் அடையாளம். ஆதி 41:42.

3 **ராஜ்யத்திலே மூன்றாம் அதிபதி.** பாபிலோனில் அப்போதிருந்த வரலாற்றுச் சூழல்களை இந்தக் கடைசி விருது மிகச்சரியாகக் காட்டுகிறது. ஏனென்றால், பெல்ஷாத்சார் தன் தகப்பனாகிய நபோனிடஸுக்கு துணைப் பிரதிநிதியாக இரண்டாவது அதிபதியாக இருந்தான். அதனால்தான் மூன்றாவது அதிபதி பதவியைக் கொடுப்பதாகச் சொல்கிறான். விருதுகள் ஆசையைத் தூண்டினாலும், ஞானிகளால் விளக்கம்சொல்ல முடியவில்லை.

ராஜா தான் செய்த எல்லா பாவங்களுக்கும் மேலாக தவறான இடத்தில் ஞானத்தைத் தேட முயல்கிறான். எழுத்துகளின் செய்தியை பாபிலோனிய நிபுணர்களால் சொல்லமுடியவில்லை. அது அவர்களுடைய மொழியான அரைமைக்கில் எழுதப்பட்டிருந்தாலும், அர்த்தத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏசாயா மூலம் ஆண்டவர் சொல்லியதுதான் ஞாபகத்திற்கு வருகிறது: 'அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டு, அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறந்து போகும்.' ஏசாயா 29:14. இந்த வசனத்தை மேற்கோள் காட்டி, 'ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கவில்லையா? எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று' என்று பவுல் எழுதுகிறான். 1கொரி 1:20,21.

சில சத்தியங்கள் மிகமுக்கியமானவை; மனிதர்கள் தாங்களாக அவற்றை அறிந்துகொள்ள விடமுடியாது; அதனால்தான் தேவன் அந்தச் சத்தியங்களை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

என்ன விருதுகள் கொடுக்கப்படவிருந்தன? சம்பவிக்கவிருந்த நிகழ்ச்சியோடு ஒப்பிடும் போது அந்த விருதுகளால் ஏதாவது பயனிருக்கிறதா? உலக காரியங்கள் நிலையற்றவை என்பதை இது எவ்வாறு சுட்டிக்காட்டுகிறது? நாம் எதைச் செய்தாலும், நித்திய வாழ்க்கையின் காட்சி எப்போதும் நம் கண்முன் இருக்க நாம் என்ன செய்யலாம்?

## ராஜாத்தி வருகை

**கேள்வி: தானி 5:9-12ஐ வாசியுங்கள். தானியேல்பற்றி ராஜாத்தி சொன்னது என்ன? ராஜாவுக்கு அதெல்லாம் முன்னரே தெரிந்திருக்க வேண்டும். ஆனால் ராஜ்யத்தில் தானியேல் இருப்பதைக்கூட அறியாதவனாக இருந்தான். அதிலிருந்து அவனைப் பற்றி என்ன தெரிகிறது?**

மர்மமான எழுத்துகள் சுவரில் எழுதப்பட்டதும் விருந்துசாலைக்குள் ஒரே குழப்பமாக இருந்தது. ராஜாத்தி வருகிறாள்; பிரமையில் இருந்த ராஜாவுக்கு வழிசொல்லுகிறாள். நேபுகாத்நேச்சாரின் காலத்தில் சொப்பனங்களுக்கு அர்த்தஞ்சொல்லி, புதிர்களை விடுவித்த தானியேல்பற்றிச் சொல்கிறாள். தன் முற்பிதாக்கள்போல பெல்ஷாத்சார் புத்திசாலியாக இருந்திருந்தால், அந்த மர்மமான எழுத்துகளுக்கு யார் அர்த்தம் சொல்லமுடியும் என்பதை அறிந்திருப்பான். அடுத்து என்ன செய்வதென ராஜா திகைத்துக்கொண்டிருந்த சமயத்தில் அங்கு ராஜாத்தி வருகிறாள். அந்த மர்மமான எழுத்துகளுக்கு அர்த்தஞ் சொல்ல ராஜ்யத்திலேயே தகுதியுடைய ஒரே நபரை மறந்ததற்காகக் கண்டிப்பதுபோலப் பேசுகிறாள். தானியேலின் சுயவிவரக் குறிப்பை அறிக்கையிடுகிறாள்: பரிசுத்த தேவனுடைய ஆவியும், வெளிச்சமும், விவேகமும், தெய்வீக ஞானமும், அறிவும், புத்தியும், விசேஷ ஆவியும், சொப்பனங்களை வியார்த்திபண்ணுகிறதும், புதைபொருள்களை வெளிப்படுத்துகிறதும், கருகலானவைகளைத் தெரிவிக்கிறதுமான அறிவும் உடைய ஒரு தீர்க்கதரிசி; நேபுகாத்நேச்சாரின் காலத்தில் சாஸ்திரிகளுக்கும் ஜோசியர்களுக்கும் கல்தேயர்களுக்கும் குறிசொல்லுகிறவர்களுக்கும் அதிபதி என்று ராஜாத்தி சொன்னாள். தானி 5:11,12.

அப்படியிருந்தும் தானியேலைப் பற்றி பெல்ஷாத்சாருக்கு தெரியாமலிருந்தது ஆச்சரியம்தான். அதற்கு நேரடியான பதில் வசனத்தில் இல்லாவிட்டாலும், ஒன்றை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. அதாவது, ராஜாவினுடைய ஆளுகையின் மூன்றாம் வருடம் மட்டும் ராஜாவுக்குச் சேவைசெய்து வந்திருக்கிறார். தானி 8:1,27. அதன்பிறகு அவர் வழக்கமான பணிகளில் ஈடுபடாமல் இருந்திருக்கலாம். அதற்கு ஒரு காரணம் வயது முதிர்வு. அப்போது அவருக்கு சுமார் 80 வயதது இருக்கும்; வயதான தலைவருக்குப் பதிலாக வாலிபர்களை நியமிக்க ராஜா தீர்மானித்திருக்கலாம். தானியேலின் தேவனுக்கு தான் அடிபணிய வேண்டியதில்லை என்கிற எண்ணத்தால் செய்திருக்கலாம். சிலபல காரணங்கள் இருந்தாலும், பிரபல நபராக இருந்த தானியேலை ராஜா மறந்தது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

ரோமர் **1:16–32**இல் வெளிப்படுத்தப்படுகிற நியதியானது, இந்தச் சம்பவத்தில் மட்டுமல்ல, இன்று உலகம் முழுவதிலும் வெளிப்படுவதை எவ்வாறு காணமுடிகிறது?

# தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய்

**கேள்வி: என்ன காரணத்திற்கு ராஜா சீக்கிரம் அழிவைச் சந்திக்கவிருந்ததாக தானியேல் சொன்னான்?**

சந்தர்ப்பசூழ்நிலைகளால் தானியேலைச் சந்திக்க தள்ளப்படுகிறானே தவிர, அவனுக்கு மனமில்லை. தானியேலுக்கு எதிராக அல்ல, தானியேலின் தேவனுக்கு எதிராக அவனுக்கிருந்த கர்வ மனநிலையே அதற்கு காரணம்.

பரிசு தருவதாகச் சொன்ன ராஜாவுக்கு தானியேல் சொன்ன பதிலானது தானியேலின் குணத்தையும் முன்னுரிமைகளையும் காட்டுகிறது. அந்த மர்ம எழுத்துகளுக்கான அர்த்தம் புரிந்திருந்ததால், அந்தப் பரிசுகளால் எந்தப் பயனுமில்லையென்றும் தானியேல் உணர்ந்திருக்கலாம். ராஜாமேல் மூன்று குற்றங்களை தானியேல் முன்வைக்கிறான்.

**முதலாவது,** நேபுகாத்நேச்சாருக்கு நிகழ்ந்த சம்பவங்களை அவன் யோசிக்கவே இல்லை. யோசித்திருந்தால், அவனைப் போல மனந்திரும்பி, தன்னைத் தாழ்த்தியிருப்பான்.

**இரண்டாவது,** திராட்சரசம் அருந்தவும், தன் விக்கிரகங்களைப் புகழவும் தேவாலயப் பாத்திரங்களை ராஜா பயன்படுத்தினான். முன்பு சொல்லப்பட்டதுபோல, ஆறு வகை பொருட்களாலான விக்கிரகங்களை தானியேல் வரிசையாகச் சொல்கிறான்.

**மூன்றாவது,** 'தம்முடைய கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவரும், உமது வழிகளுக்கு எல்லாம் அதிகாரியுமாகிய' தேவனை மகிமைப்படுத்த ராஜா தவறிவிட்டான். தானி 5:23.

ராஜாவின் தோல்விகளைச் சொன்னபிறகு, தானியேல் அந்த எழுத்துகளுக்கு விளக்கம் சொல்கிறான். சுவரில் தேவன் எழுதிய வார்த்தைகள் மூன்று அரமெய்க் வினைச்சொற்களை உடையது. முதல் சொல் மட்டும் திரும்ப எழுதப்பட்டுள்ளது. அந்த வினைச்சொற்களின் அடிப்படை அர்த்தத்தை ராஜாவும் ஞானிகளும் அறிந்திருப்பார்கள். மெனே: 'காணப்பட்டது'; தெக்கேல்: 'நிறுக்கப்பட்டது'; பார்ஸ்: 'பிரிக்கப்பட்டது.' பாபிலோனின் வாசலருகே மேதிய-பெர்சிய படைகள் இருந்தன. எனவே அந்த வார்த்தைகள் மூலம் மோசமான செய்தி சொல்லப்பட்டிருக்குமென்பது ஞானிகளுக்குத் தெரியும். ஆனால் ராஜா விரும்பாத எதையும் அவனிடம் சொல்கிற தைரியம் அவர்களுக்கில்லை. தானியேல் தைரியமாகச் சொல்கிறான்: 'மெனே': தேவன் உன் ராஜ்யத்தை எடைபோட்டு, அதை முடித்தார். 'தெக்கேல்': நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையே காணப்பட்டாய். 'பார்ஸ்': உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு, மேதிய-பெர்சியர்களுக்குக் கொடுக்கப்பட்டது. தானி 5:26-28. இது ஒன்றும் சந்தோஷமும் ஆறுதலுமான செய்தியல்ல.

ராஜாவுக்கு நியாயத்தீர்ப்பு சடிதியில் நேரிடுகிறது. இன்னும் சில விஷயங்களில் தேவன் நீதியும் நியாயமும் செய்யாமல் இருக்கலாம்; அந்தச் சூழ்நிலைகளிலும் நாம் தேவனை நம்புவதற்கு என்ன செய்யலாம்? பிர 3:17; 8:11; மத் 12:36; ரோமர் 14:12.

# பாபிலோனின் விழுகை

**கேள்வி: கடைசிக்கால பாபிலோனின் விழுகைக்கு அடையாளமாக இருக்கும் பெல்ஷாத்சாருடைய பாபிலோனின் விழுகைபற்றி நாம் என்ன கற்றுக்கொள்ள முடிகிறது? தானி 5:29-31; வெளி 14:8; 16:19; 18:2.**

எவ்வளவுதான் குறைகள் இருந்தாலும் பெல்ஷாத்சார் வாக்குத் தவறவில்லை. தானியேல் சொன்ன விளக்கம் கெட்ட செய்தியாக இருந்தாலும்கூட விளக்கத்தை ஏற்றுக்கொண்டான். தான் உறுதியளித்தபடி தீர்க்கதரிசிக்கு பரிசுகளை வழங்குகிறான். தானியேலுடைய செய்தி உண்மை என்பதைஅவன் உணர்ந்த செயலானது, தானியேலுடைய தேவன் உண்மையானவரென அவன் உணர்ந்ததை எடுத்துக்காட்டியது. முன்பு பரிசுகளை மறுத்த தானியேலும்கூட இப்போது ஏற்றுக்கொள்கிறான். விளக்கம்சொல்வதற்கு இனி அவை தடையாக இருக்காது என்பதும் காரணமாக இருக்கலாம். ஆனால் அந்தச் சூழ்நிலையில் அந்தப் பரிசுகளால் பயனில்லை; சாம்ராஜ்யம் விழ இருந்தது. அப்படியிருந்தாலும் ஒரு மனிதாபிமானத்திற்காக, தீர்க்கதரிசி அந்தப் பரிசை ஏற்றுக்கொள்கிறான்; ஒரு சில மணி நேரங்களே ராஜ்யத்திற்கு தான் மூன்றாம் அதிபதியாக இருக்கப்போவதையும் அறிந்திருந்தான்.

தீர்க்கதரிசி சொன்னபடி பாபிலோன் விழுகிறது. ராஜாவும் அவனுடைய அரசவையினரும் குடித்து வெறித்திருந்த நிலையில், சண்டையில்லாமல் சடிதியில் பாபிலோன் விழுகிறது. பெர்சியர்கள் கால்வாய் ஒன்றை வெட்டி, ஐபிராத்தைத் திருப்பிவிட்டு, அந்த ஆற்றுப்படுகை வழியாக நகரத்திற்குள் அணிவகுத்துச் சென்றதாக ஹெரோடாடஸ் எனும் வரலாற்றாசிரியர் எழுதுகிறார். அன்று இராத்திரியில் பெல்ஷாத்சார் கொல்லப்பட்டான். அவனுடைய அப்பா நபோனிடஸ் ஏற்கனவே நகரத்தை விட்டு ஓடியிருந்தான்; பின்னர் புதிய ஆட்சியாளர்களிடம் சரணடைந்தான். எனவே வரலாற்றிலேயே மிகப்பெரிதான சாம்ராஜ்யம் விழுந்தது.; பொன்னான தலையாகிய பாபிலோன் முடிந்தது.

'தேவனை அறிந்து, அவருடைய சித்தப்படி செய்ய பெல்ஷாத்சாருக்கு பல வாய்ப்புகள் கொடுக்கப்பட்டன. தன்னுடைய தாத்தா நேபுகாத்நேச்சார் மனிதர்களிடமிருந்து தள்ளப்பட்டதைக் கண்டிருந்தான். அரசன்அகந்தையோடுதன்அறிவைகுறித்துபெருமைபாராட்டியபோது அதைக் கொடுத்தவர் அதை எடுத்ததையும் பார்த்திருந்தான். ராஜா ராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்டு, வெளியின் மிருகங்களோடு சஞ்சரிக்க விடப்பட்டதையும் கண்டிருந்தான். அந்தப் பாடங்களை அவன் மறந்திருக்கக் கூடாது; ஆனால் கேளிக்கையும் சுயமகிமையும் மறக்கச்செய்தன. நேபுகாத்நேச்சார்மேல் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவந்த அதே பாவங்களைச் செய்தான். கிருபையாகக் கொடுக்கப்பட்ட தருணங்களை வீணாக்கினான்; சத்தியத்தை அறியும்படி கொடுக்கப்பட்ட வாய்பப்புகளைப் புறக்கணித்தான்.' - *BE, Apr 25, 1898.*

'சத்தியத்தை அறிந்துகொள்ள' என்னென்ன வாய்ப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன? அறிந்துகொள்ளவேண்டிய அனைத்து சத்தியங்களையும் அறிந்ததாக எப்போது சொல்லமுடியும்?

# வெள்ளி பெப்ரவரி 7

## மேலும் படிக்க:

பெரிய அளவில் விருந்துநடத்துவது முந்தைய காலங்களில் வழக்கமான ஒன்று. ராஜாக்கள் ஆடம்பரத்தையும் பராக்கிரமத்தையும் வெளிப்படுத்த தடபுடலாக விருந்து வைப்பார்கள். இந்த விருந்துகுறித்த அனைத்து விவரங்களும் தெரியவில்லை. ஆனால் மேதிய பெர்சிய படைகள் தாக்குதலுக்கு தயாராக இருந்த சமயத்தில் இந்த விருந்து நடைபெறுகிறது. மனிதபார்வையில் கவலைப்படுவதற்கு தேவையே இல்லைதான். பாபிலோனில் அரணான மதில்கள் இருந்தன. பல வருடங்களுக்குத் தேவையான உணவு இருந்தது. நகரத்தின் மையத்தில் ஐபிராத்து நதி ஓடியதால், தண்ணீருக்கும் பஞ்சமில்லை. அதனால்தான் எதிரிகள் நகரத்தைச் சூழ்ந்திருந்தாலும் ராஜா விருந்து நடத்துகிறான். முதலில் கொண்டாட்டமாக ஆரம்பித்து, களியாட்டமாக மாறுகிறது. தேவ வல்லமைக்கு எதிராக மனிதர்கள் இறுமாப்பு கொள்வதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு. சத்தியத்தைப் பற்றி அறிந்துகொள்ள தேவன் எத்தனையோ வாய்ப்புகளை ராஜாவுக்குக் கொடுத்திருந்தார்; அவன் கேட்கவில்லை; அதனால்தான் 'தம்முடைய கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவரும், உமது வழிகளுக்கு எல்லாம் அதிகாரி' என்று தானியேல்மூலம் சொல்லியனுப்புகிறார். தானி 5:23.

'தேசங்களின் வரலாறு இன்று நம்மோடு பேசுகிறது. மகத்தான தம்முடைய திட்டத்தில், ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தேவன் ஒரு இடத்தை நியமித்துள்ளார். தவறே இழைக்காதவரின் கரத்திலிருக்கும் தூக்கு நூலால் இன்றைய மனிதரும் தேசங்களும் சோதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவரும் தங்கள் சுயதீர்மானத்தின்படிதான் தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறார்கள். தேவனோ தம் நோக்கங்களை நிறைவேற்றும்படி ஒவ்வொருவர் மேலும் ஆட்சிசெய்து வருகிறார்..' – *EGW, PK,* பக். *536.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *சமுதாயமும் கலாச்சாரமும் தேவனுடைய சத்தியத்தைத் தீட்டுப்படுத்துகிற வழிகள் குறித்து ஞாயிற்றுக்கிழமையில் கேட்கப்பட்ட கேள்விக்கான பதிலை வகுப்பில் கலந்தாலோசியுங்கள். அந்தத் தீட்டான வழிகளை ஒதுக்க தனிநபராகவும் சபையாகவும் நாம் என்ன செய்யலாம்?*

2 *நாம் என்ன அறிந்திருக்கிறோம் என்பதை வைத்தல்ல, அறிந்திருப்பவற்றிற்கு எவ்வாறு இணங்குகிறோம் என்பதை வைத்துதான் இரட்சிப்பைச் சொந்தமாக்குகிறோம். தானி 5:22.*

3 *தானி 5:23இல் சொல்லப்படும் முக்கிய ஆவிக்குரிய நியதிகள் என்ன? தேவனுக்கு எதிர்த்துநிற்கக்கூடாதென அந்த வசனம் எவ்வாறு எச்சரிக்கிறது? அல்லது, தேவன் நம் சிருஷ்டிகர் மட்டுமல்ல, நம்மைத் தாங்கி நடத்துகிறவர் என்பதையும் எவ்வாறு வலியுறுத்துகிறது?*

4 *வார்த்தைகளின் அர்த்தம் புரியாமலேயே பெல்ஷாத்சார் திகிலடைகிறான். தானி 5:6. குற்றவுணர்வுடன் வாழ்வதால் உண்டாகிற விளைவுகள்குறித்து இதிலிருந்து என்ன அறியமுடிகிறது?*